சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **1**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

24.10.2002 தேதியில் என் குடும்ப பூர்வீக சொத்துக்களை பொறுத்து, என் குடும்பத்தினரும், என் பெரியப்பா கிருஷ்ணன் குடும்பத்தினரும் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த பாகப்பிரிவினை ஆவணத்தின் அசல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் அ அட்டவணை சொத்து என் பெரியப்பா கிருஷ்ணன் குடும்பத்திற்கும், பி அட்டவணை சொத்து என் குடும்பத்திற்கும் ஒதுக்கப்பட்டது. அந்த பி அட்டவணை சொத்து என் தகப்பானருக்கும், எனக்கும், என் சகோதரிகள் 1, 2 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டது. பி அட்டவணை சொத்து 800 சதுர அடி கொண்ட நிலம். அதில் தார்சு வீடு உள்ளது என்றால் இல்லை. காலியிடமாக உள்ளது. அந்த இடம் அரசாங்கத்தில் மனு கொடுத்து, தொகுப்பு வீடு கட்டுவதற்காக இலவசமாக அரசாங்கத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, பின்னர், வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் பெயரில் வீடு கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு மனு எதுவும் கொடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், அரசாங்கத்திலிருந்து என் அப்பாவிற்கு இடம் ஒதுக்கப்பட்டு, அதில் தொகுப்பு வீடு கட்டப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள பி அட்டவணை சொத்திற்கு கீழ்புறம் என் அப்பா கிரயம் பெற்ற சொத்து என காண்பிக்கப்பட்டுள்ளது.

24.10.2002 தேதியில் என் அப்பா பெரியம்மாள் என்பவரிடமிருந்து ஒரு சொத்தை கிரயம் பெற்றார். என்னிடம் காட்டப்படுவது அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2.

அந்த கிரயச்சொத்து 440 சதுர அடி அளவுள்ள சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தில் ஆஸ்பெஸ்டாஸ் ஓடு வேய்ந்த வீடு உள்ளது என்றால் சரியல்ல. மண்ணாலான சிவப்பு சீமை ஓடு போட்ட வீடு உள்ளது. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களுக்கு வடபுற எல்லையாக முத்தம்மாள் என்பவர் சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணங்களில் கண்டுள்ள சொத்திற்கு கீழ்புறமாக உள்ள சொத்தை மகேஸ்வரி என்பவர் அனுபவித்து வருகிறார் என்றால் முன்பு பொன்னப்பகவுண்டர் பேத்தி கோமதி என்பவர் வீடு இருந்தது. தற்போது மகேஸ்வரி என்பவர் அந்த வீட்டில் உள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு மேற்குபக்கம் பழனிச்சாமி என்பவர் அனுபவத்தில் உள்ள இடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, மேற்குபக்கம் கிருஷ்ணசாமி, சுருட்டையப்பன் இடம் உள்ளது. ஈசநத்தம், கஸ்பா தெரு சர்வே எண். 799 ல் உள்ளது என்றால் அந்த தெருவின் ஒரு பகுதி சர்வே எண். 799 ல் உள்ளது. தெருவின் மற்ற பகுதிகள் எந்த சர்வே எண்களில் உள்ளன என்று எனக்கு தெரியாது. நத்தம் சர்வே எண். 799 ன் பழைய சர்வே எண். 702. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள A அட்டவணை சொத்தை கிருஷ்ணன் குடும்பத்தினர், ராமசாமி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டனர். மேற்படி சொத்தை ராமசாமியிடமிருந்து, 1 ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

அரவக்குறிச்சி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 79/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை உண்மை நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3.

மேற்படி அசல் வழக்கில் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண். 799/12 பி-ல் உள்ள சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை என்றும், எனக்கு மட்டுமே பாத்தியம் உள்ளது என்றும் விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு சொத்துவிபரத்தில் நான்குமால் எல்லைகள் குறிப்பிடப்படவில்லை. பி.வா.சா.ஆ.3 வழக்கு சொத்துவிபரத்தில் 7 அடி அகல பாதையில் நடந்துக்கொள்ளும் மாமூல் பாதை என குறிப்பிட்டுள்ளேன். அந்த 7 அடி பாதை என்பது பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் என் குடும்பத்திற்கும், என் பெரியப்பா குடும்பத்திற்கும் பொதுவாக ஏற்படுத்திக்கொண்ட பாதை என்றால் சரிதான்.

அசல் வழக்கு எண். 344/2024 வழக்கை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராகவும், பதிவுத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில், அ அட்டவணை சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் 1 முதல் 3 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 344/2024 வழக்கு சொத்து விபரத்தில் நான்குமால் எல்லை விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

அசல் வழக்கு எண். 345/2024 வழக்கை என் சகோதரி 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அ.வ.எண். 79/2022 மற்றும் 344/2024 வழக்குகளில் வா.சா.ஆ.6 உயில் உள்ளது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண். 345/2024 வழக்கை தாக்கல் செய்து, அதில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரான பிறகுதான், தாவா உயிலை நான் என் நண்பருடன் சேர்ந்து, போலியாக, மோசடியாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

உமாராதா என்பவர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 68/2021 வழக்கில் அவர் என் பெரியப்பா கிருஷ்ணனின் மகள் இல்லை என நான் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

சர்வே எண். 705 ல் எங்கள் குடும்பத்திற்கு எத்தனை சொத்துக்கள் உள்ளன என்றால் இரண்டு சொத்துக்கள் உள்ளன. மேற்படி இரண்டு சொத்துக்களுக்கும் வருவாய்த்துறை ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த சொத்துக்களுக்குரிய வருவாய்த்துறை ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை.

பிரதிவாதிகள் சர்வே எண்களை மாற்றி மோசடியாக பத்திரங்களை உருவாக்கி கொண்டனர் என நான் கரூர், நிலஅபகரிப்பு பிரிவில் ஒரு புகார் மனு கொடுத்து, அந்த மனு விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் விசாரணையில், ஆய்வாளர் என் ஊருக்கு வந்து புல எண். 705 ல் உள்ள சொத்தை என்னிடம் காட்டச்சொன்னார் என்றும், என்னால் அந்த சொத்தை காட்ட முடியவில்லை என்பதால், அந்த புகார் முடிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தில், என் அப்பா கிரயம் பெற்ற சொத்தையும், பாகப்பிரிவினையில் என் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் என் அப்பாவின் பாக சொத்தையும், எனக்கு என் அப்பா உயில் மூலம் கொடுத்துள்ளார். சர்வே எண். 705 ல் என் குடும்பத்திற்கு சொத்துக்கள் எதுவும் கிடையாது என கட்சி செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியமில்லாத சொத்தை பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது காண்பித்து போலியாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தை என் அப்பா எழுதி வைத்தார் என நான் சொல்வது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 உயில் ஆவணம், வழக்குகளுக்கு பின்னால் என்னால் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

என் பெரியப்பா குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை கிரயம் வாங்கிய ராமசாமியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றும், அந்த சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டுவதற்காக வேலை செய்தபோது, அதை நான் தடுத்து நிறுத்தி, புகைப்படம் எடுத்து, அதை தவறாக என்னுடைய சொத்தில் கட்டுமான வேலை செய்தார் என வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், என் குடும்பத்தினருக்கும் ஈசநத்தம் கிராமத்தில், நத்தம் சர்வே எண். 705ல் எந்தவொரு சொத்தும் கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களில் பழைய சர்வே எண். 702 என்பதற்கு பதிலாக 705 என தவறாக காண்பிக்கப்பட்டதை பயன்படுத்தி, என் குடும்பத்திற்கு நான்கு சொத்துக்கள் உள்ளன என்றும், அவை வெவ்வேறு சொத்துக்கள் என்றும் தவறாக கட்சி செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண். 702 என்பதற்கு பதிலாக 705 என தவறாக இருந்ததை பிரதிவாதிகள் சீர்திருத்த பத்திரம் மூலம் சரி செய்துவிட்டனர் என்றால் சரியல்ல. அந்த விவரம் எந்தக்காலக்கட்டத்திலும் என் கவனத்திற்கு வரவில்லை. தாவா சொத்தில் என்னுடைய செலவில் நான் வீடு கட்டினேன் என நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு என் அப்பா குடியிருந்து வந்த வீடு என்றால் ஆஸ்பெஷ்டாஸ் வீட்டில் என் அப்பாவும், நானும் வசித்து வந்தோம். தார்சு வீட்டில் நானும், என் அப்பாவும், அம்மாவும் வசித்து வந்தோம்.

வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் அப்பாவுடையதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குகளில் கூறியுள்ள சொத்து விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல.

என் சகோதரி 1ம் பிரதிவாதிக்கு நான் 5 செண்ட் நிலம் வாங்கிக்கொடுத்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நான் மேற்சொன்ன விவரத்தை பொய்யாக கூறுகிறேன் என்றும், அதனால்தான் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்களை மாற்றி மோசடியாக பிரதிவாதி ஆவணங்களை உருவாக்கியுள்ளார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில், அரசின் பல துறைகளுக்கு மனு செய்து ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும், 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு அவர் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா எந்தக்காலத்திலும் உயில் ஆவணம் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>**2**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.